மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1957-ம் ஆண்டு ஜூன் மாதத்தி லிருந்தே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தத் தொடங்கியிருக்கிறது, வற்புறுத்திக்கொண்டே வரு கிறது, இந்த அரசும் வற்புறுத்தும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த மின்சார ரயில் பாதை நீண்ட நாட்களாகவே பேசப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படாமல இருக்கிறது. எழுச்சி நாளிலே இதையும் சேர்த்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து மத்திய அரசோடு போராடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார் களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எழுச்சி நாளென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதையும் மனதிலே நினைத்துக்கொள்ளலாம்.

DR. H. V. HANDE : This question of electrification of the Madras-Arkonam Railway line has been hanging fire for the last one decade. Apart from the fact that it costs some money, have the Central Government given any other specific reasons for postponing this scheme from the Second Five-Year Plan to the Third and Fourth Five-Year Plan, which may even be postponed to the fifth five year plan ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் எந்தக் காரணமும் சொல்லவில்லை, பரிசீலித்து வருகிறோம், பரிசீலித்து வருகிறோம் என்ற காரணத்தைத் தவிர.

THIRU R. PONNAPPA NADAR : Has the State Government fixed any priority list for the other railway lines ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னை-அரக்கோணம், சென்னை-கும்மிடிபூண்டி லைன்களில் மின்சார ரயில்கள் விட ஏற்பாடுகள் செய்தல்.

சேலத்திலிருந்து கரூர் வழியாக திண்டுக்கல்லுக்கு பிராட்கேஜ் ரயில் பாதை ஒன்றைப் புதிதாக அமைத்தல், திண்டுக்கல்லிலிருந்து மதுரை வழி யாகத் தூத்துக்குடி செல்லும் ரயில் பாதையை பிராட்கேஜ் ரயில் பாதை யாக மாற்றுதல்; இதில் மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்கிற இணைப்பும் அடங்கும்.

திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் வழியாகத் திருவனந்த புரத்திற்கு (நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு கிளைப்பாதையுடன்) புதிய ரயில் பாதை ஒன்றை அமைத்தல்.

திருச்சிராப்பள்ளிக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் உள்ள கார்டு லைனை பிராட்கேஜ் லைனாக மாற்றியமைத்தல்; விழுப்புரத்திலிருந்து செங்கற்பட்டிற்கு கூடுதலாக பிராட்கேஜ் லைன் ஒன்றை அமைத்தல், அரக்கோணத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையே உள்ள ரயில் பாதையை பிராட்கேஜ் பாதையாக மாற்றியமைத்தல்.

இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

Salary of Ministers

* 389 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the members of the Cabinet including the Hon. Chief Minister have decided not to draw any salary or allowances, etc ; and

(b) if so, whether they propose to work without remuneration of any kind ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : ஐயா, பதில் இல்லையென்றால், எப்பொழுது ஊதியம் வாங்கினார்கள், எப்பொழுது வாங்க முயற்சிக்கிறார்கள் என்ற விவரம் சொல்ல முடியுமா?

THE HON. THIRU C. N. ANNADURAI : The main question is : whether it is a fact that the members of the cabinet including the Hon. Chief Minister have decided not to draw any salary. The answer is 'No' which means that they may draw the salary.

THIRU K. VINAYAKAM : My question is very relevant. I am very careful in framing my question.

வாங்குவது இல்லை என்று முடிவு செய்யவில்லையென்றால் எப்பொழுது வாங்கப்போகிறார்கள்? விநாயகம் பரிந்து கேட்டால் வாங்காமல் இருப்பேனா என்று முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்களே, ஞாபகம் இருக்கிறதா? இந்த மாதம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக வாங்கலாமா?

THE HON. THIRU C. N. ANNADURAI : Since my hon. Friend is much interested in our drawing the salary, I am tempted to ask him why he is so much interested, because usually in official circles when one officer asks his brother officer to draw the salary, a doubt arises whether it is with a view to take a loan. Is it with that idea that the question is put ?

THIRU K. VINAYAKAM ; On a point of order, Sir. During question hour it is the right of the Members to put questions to the Ministers and it is the duty of the Ministers to answer. Here I find the Chief Minister putting a question to me expecting me to answer. Is this in order ?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend should know that in English grammar sometimes answers come in the form of questions.

பர்மாவிலிருந்து வந்த தமிழர்கள்

***390 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இதுவரை தமிழர்கள் எத்தனைபேர் பர்மாவிலிருந்து சென்னை மாநிலத்தில் குடியேறியுள்ளார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 1964 ஜூலையிலிருந்து 1—6—1967 வரை பர்மாவிலிருந்து தாயகம் திரும்பி இம்மாநிலத்தில் குடியேறியவர்கள் மொத்தம் 82,755 பேர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்களைப் பொறுத்தவரையில் அவ்வளவு பேர்களும், தமிழ் நாட்டிலேயே குடியேறியிருக்கிறார்களா அல்லது வேறு எந்த